

சர்வதேசத் தீவிரவாதம் பற்றிய திகிலூட்டும் தொடர்

93

# மாயவலை

■பா.ராகவன்

அதே ஸ்ரீநகர். அதே சிறப்பு அதிரடிப் படைத் தலைமை அலுவலகம். அதே குளிர். அதே அத்துவானக் காடு.

முந்தைய முறை முயற்சி செய்து தோற்று சரியாக ஐம்பத்து மூன்று தினங்கள் ஆகியிருந்தன. இடைப்பட்ட காலத்தில் லஷ்கர் போராளிகளுக்குப் பயிற்சிகள் மிகவும் கடுமையாக்கப்பட்டிருந்தன. ஒரு நாளில் அவர்கள் பன்னிரண்டு முதல் பதினைந்து மணிநேரம் பயிற்சி மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஓட்டப் பயிற்சி. குறி பார்த்துச் சுடும் பயிற்சி. குண்டு வீசும் பயிற்சி. மூடு பனியில் வேலை பார்க்கும் பயிற்சி. தவிரவும் சில மனப்பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. ஆப்கனிஸ்தானிலிருந்து சில மூத்த போராளிகள் முஸஃபராபாத்துக்கு வரவழைக்கப்பட்டு, மனத்தை ஒருமுகப்படுத்துவதிலும், பதற்றமடையாமலிருப்பதிலும் அவர்களைத் தேறச் செய்ய முயற்சி மேற்கொண்டார்கள்.

குளிர் ஒரு சிறந்த மயக்க மருந்து. மிக விரைவில் சோர்வடையச் செய்துவிடும். இருந்து பார்த்தாலொழிய அதை விவரிக்க முடியாது. 2001-ம் ஆண்டு கைது செய்யப்பட்ட ஒரு ஹிஸ்புல் முஜாஹிதீன் போராளியின் டைரிக் குறிப்பில் இது பற்றிய சிறப்பு விவரங்கள் கொஞ்சம் இருக்கின்றன. எது குறித்தும் கவலைப்படாமல் திட்டத்தைச் செயல்படுத்த உழைத்துக் கொண்டே இருப்பார்களாம். திடீரென்று குளிர் குறித்த நினைவு வந்துவிட்டால், உடனே உடலும் மனமும் சோர்ந்துவிடும் என்கிறான் அவன். உடலை அல்ல; மனத்தைத்தான் அது முதலில் தாக்குகிறது என்பதுதான் இதற்கு அர்த்தம்.

லஷ்கர், தன்னுடைய வீரர்களுக்கு குளிரைச் சமாளிப்பதற்கான சிறப்பு உடைகளை அப்போது வழங்கியிருந்தது. மிகவும் கனமான உடைகள். ஆட்டு ரோமத்தால் நெய்யப்பட்டு, இரு புறமும் தடிமனான தோலால் தைக்கப்பட்ட உடைகள். தண்ணீர் உள்ளே இறங்கிவிடாமலிருப்பதற்காக மேற்புறம் மழைக்கோட்டு போல ரெக்ஸின் லேயர் ஒன்று தரப்பட்டிருக்கும். சுமந்துகொண்டு நடப்பதுதான் கஷ்டம். அதற்குப் பழகிவிட்டால், குளிரைச் சமாளித்துவிட முடியும்.

2000-ம் ஆண்டின் தொடக்கத்தில் லஷ்கர் போராளிகளுக்கான இந்தச் சிறப்பு உடைகள் (கோட் மட்டுமின்றி, கிளவுஸ்கள், தொப்பி, ஷூக்கள், பனிக் கண்ணாடி இன்ன பிற.) மொத்தமாக உஸ்பெகிஸ்தானிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கின்றன. அதுவரை ரோஜாவில் அரவிந்தசாமியைக் கடத்திப்போகும் தீவிரவாதிகளைப் போல், அத்தனை மோசமாக வெறும் ஸ்வெட்டரோடு இல்லை என்றாலும், சிலாகிக்கும்படியான ஏற்பாடுகள் அவர்களிடம் இல்லை. லஷ்கர் என்றில்லை. எந்த காஷ்மீர் இயக்கமுமே, உடை விஷயத்திலெல்லாம் இத்தனை கவனம் செலுத்தவில்லை.

ஆனால், தன்னுடைய செயல்பாடுகளுக்கு எந்த ஒரு சிறு அம்சமும் பிரச்னை தரக்கூடாது என்று நினைத்து, பார்த்துப் பார்த்து இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள்.

உடை, உபகரணங்கள் மட்டுமில்லை. ராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும் உணவைப் போலவே, லஷ்கர் போராளிகளுக்கும் உணவு தயாரிக்கப்பட்டது. ஃபீல்ட் ஒர்க்குக்குப் போகிறவர்களுக்குக் கண்டிப்பாக இலை போட்டுச் சாப்பாடு கிடையாது. அல்லது பிரியாணி கிடையாது. உலர்ந்த பழங்கள், க்ளுக்கோஸ், கொட்டைகள் ஆகியவைதான். அவுன்ஸ் அளந்துதான் தண்ணீர் குடிக்கவேண்டும். கம்ப்ளீட் மெடிக்கல் செக்கப் உண்டு. எடை கூடிவிடாமலிருக்க ஜாகிங் பயிற்சி உண்டு.

உலகில் அல் காயிதா தவிர, வேறெந்த ஓர் அமைப்பிலும் இம்மாதிரியான ராணுவ ஒழுங்கு கிடையாது. திருமணம், குழந்தைப் பேற்றுக்கெல்லாம் அங்கே பக்காவாக லீவு லெட்டர் கொடுத்து முன்னனுமதி பெற்றுக் கொண்டுதான் ஊருக்குப் போகவேண்டும். லஷ்கர், தன் வீரர்களின் செய் நேர்த்தி என்பது, இந்த ஒழுக்கத்திலிருந்துதான் பிறக்கும் என்று தீவிரமாக நம்பும் ஓர் இயக்கம். எனவே, கூடுமானவரை அல் காயிதா கடைப்பிடிக்கும் ஒழுக்க விதிகளை அப்படியே தன்னுடைய வீரர்களுக்கும் அமல்படுத்தியிருக்கிறது.

பொழுதுபோகவில்லை என்று பக்கத்து கிராமத்தில் யாராவது ஒரு குட்டியைத் தேடிப்பிடித்துக் காதலித்து, கடுதாசியெல்லாம் கொடுத்துவிடமுடியாது அவர்களால். இருந்த சுவடு தெரியாமல் அழித்துப் பனிக்குள் புதைத்துவிடுவார்கள். கடுமையான விதிகள் உண்டு. திருமணத்துக்கு அனுமதி கொடுப்பார்கள். முன்னதாகச் சொல்லி, பெண், பெண் வீட்டார் விவரங்களை எழுதிக் கொடுத்து, பிரத்தியேக உளவுத்துறையின் பரிசோதனைகளுக்குச் சம்மதித்தாக வேண்டும். அவர்கள் பார்த்து ஓ.கே. சொன்னபிறகு, குறிப்பிட்ட கால இடைவெளிக்கு அப்புறம் ஒருவாரம் லீவில் போய் கல்யாணம் கட்டிக்கொண்டு மாமியார் வீட்டுக்குப் போய்விட்டு வரலாம்.

திருமணமான லஷ்கர் போராளிகள், சந்தோஷமாகத் தம் மனைவி, மக்கள், மாமியார் வீடு, அனுபவங்கள் பற்றியெல்லாம் பிரம்மச்சாரி போராளிகளிடம் பேசக்கூடாது. அது, வேலையில் கவனத்தைக் குலைக்கும் என்பது லஷ்கரின் நம்பிக்கை. கூடுமானவரை அவர்கள் அணி பிரிக்கும்போதே பிரம்மச்சாரி அணி, குடும்பஸ்தர்கள் அணி என்றுதான் பிரிக்கிறார்கள். வெளியில் சொல்லுவதில்லை என்றாலும், நடந்த சம்பவங்களில் பங்குபெற்றோர் பின்னணியைக் கொஞ்சம் ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தால் இது புரியும்.

தனி மனித ஒழுக்கத்துக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுக்கும் இயக்கம் லஷ்கர். இதில் அவர்கள் சமரசமே செய்துகொள்வதில்லை. கூட்டுக்கொள்ளை, கற்பழிப்பு மாதிரியான சமாசாரங்களுக்கும் லஷ்கருக்கும் ரொம்ப தூரம். எத்தனையோ பல காஷ்மீர் தீவிரவாத இயக்கங்கள், கிராமத்து மக்களிடம் அத்துமீறிய சம்பவங்களை நாம் தினசரிகளில் படித்திருக்கிறோம். இம்மாதிரியான காரியங்கள் லஷ்கர் ஆட்களால் செய்யப்பட்டிருக்காது. கொஞ்சம் ஒழுக்க மீறல் நடக்கிறது என்று கேள்விப்பட்டால் கூட, அங்கே கண்ணை மூடிக்கொண்டு சுட்டுவிடுவார்கள். விசாரணை கூடக் கிடையாது.

இதையெல்லாம் கடைப்பிடித்து, கட்டிக்காத்து எதைச் சாதிக்கப் போகிறார்கள் என்று பார்த்தால், இந்திய இலக்குகள். அதில் மாற்றமில்லை. காஷ்மீரின் விடுதலை. இதில் கிஞ்சித்தும் மாற்றமில்லை. யுத்தத்தில் இறக்கும் உயிர்களைக் குறித்த கவலை இல்லை. ஆண்களா, பெண்களா, குழந்தைகளா என்று பார்ப்பதில்லை. முஸ்லிம்கள் இறந்தால் சொர்க்கத்துக்குப் போகப் பிரார்த்தனை நடத்தப்படும். ஹிந்துக்கள் இறந்தால் நசிகேதன் போன பாதையில்தான் போகவேண்டும். ஆனால், அவனைப்போல் திரும்பி வந்துவிடக் கூடாது.

சே. சிறப்பு அதிரடிப் படை தலைமை அலுவலகத்துக்குப் புறப்பட்டுக்கொண்டு இருந்தோம். என்னென்னவோ பேசி ரூட் மாறிவிட்டோம். பாதகமில்லை. லஷ்கரைக் குறித்துத் தெரிந்து கொள்ளும்போது இதெல்லாமும் முக்கியம்தான். அந்த டிசம்பர் இருபத்தேழாம் தேதி திட்டத்துக்கு லஷ்கர் நியமித்திருந்த அணியில் மொத்தம் பதினேழு பேர் இருந்தார்கள். பதினேழு பேரில் ஆறு பேருக்கு உளவு பார்க்கும் உத்தியோகம் மட்டும். இலக்கைச் சுற்றி இருநூறு மீட்டர் வட்டத்தில்

அவர்கள் இரண்டு தினங்கள் பதுங்கி நின்று, ஆபத்துகள் குறித்த விவரங்களைச் சேகரித்து அனுப்பிக்கொண்டே இருக்கவேண்டும். வாகனப் போக்குவரத்து, கட்டடத்துக்கு உள்ளிருந்து வெளியேயும், வெளியிலிருந்து உள்ளேயும் வந்து போகிறவர்கள் குறித்த தகவல்கள், உள்ளே இருக்கும் படைவீரர்களின் எண்ணிக்கை, அவர்கள் சாப்பிடப்போகும், மூச்சா போகப்போகும், சாயா குடிக்கப்போகும் நேர விவரங்கள் இத்தியாதிகளைக் கவனிப்பது.

இரண்டாவது குழு, இன்னும் ஆறு பேரை உள்ளடக்கியது. செயல்வீரர்களாகக் களத்தில் குதிக்கப் போகிறவர்களின் சொந்தத் தேவைகளைக் கவனித்துக் கொள்வது இவர்களுடைய பணி. கிட்டத்தட்ட கிரிக்கெட்டில் டிரிங்ஸ் இடைவேளையில் தண்ணீர் பாட்டில் கொண்டுவந்து கொடுக்கும் டுவெல்த் மேன் மாதிரியான வேலைகள் போலிருக்கிறது.

இந்த இரண்டு அணிகள் தவிர, மூன்றாவதாக ஓரணியும் இருந்தது. அதில் மூன்று பேர் இருந்தார்கள். ஸ்ரீநகரிலிருந்து முஸஃபராபாத்துக்குத் தகவல் தெரிவித்துக்கொண்டே இருக்கும் பணி இவர்களுக்கு. திட்டமிட்டபடி காரியம் முடிந்து, செயல்வீரர்கள் தப்பித்துவிட்டால், அவர்களைப் பாதுகாப்பாக எல்லை தாண்டிக் கொண்டுவந்து விடும் பணியும் இவர்களுடையதே ஆகும்.

பதினேழு பேரில் பதினைந்து கழிந்ததா? மிச்சம் இரண்டு பேர். அவர்கள்தான் காரியத்தைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டவர்கள். சரித்திரம் குறிப்பெடுத்து வைக்கும் அளவுக்கு முக்கியஸ்தர்கள் இல்லை போலிருக்கிறது. எனவே, பெயர்கள் என்னவென்று தெரியவில்லை.

குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட சிறப்பு அதிரடிப்படை ஆபீஸுக்கு அவர்கள் சௌக்கியமாக வந்து சேர்ந்தார்கள். முந்தைய முறை வந்தவர்களைப் போல இவர்களிடம் பதற்றம் ஏதுமில்லை. மிஞ்சிப்போனால், என்ன... உயிர்தானே போகப்போகிறது என்கிற அசாத்தியத் தெனாவட்டுத் துணிவால் தயாரிக்கப்பட்டவர்கள் அவர்கள்.

ஆகவே, உச்சிமீது மலை இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமின்றி உத்தியோகம் பார்க்கக்கூடியவர்களாக இருந்தார்கள். முந்தைய முறையைப் போலவே மரத்தின் பின்னால்தான் பதுங்கி நின்றார்கள். அதே மாதிரிதான், உள்ளே சென்ற ஒரு வாகனத்தில் தொற்றி ஏறிச் சுட்டபடி உள்ளே போனார்கள். கிரானைடுகளும் கையெறி குண்டுகளும் சீறிப் பறந்தன. வெடித்த இடங்களில் எல்லாம் ஆட்கள் சிதறி விழுந்தார்கள். சைரன்களின் ஒலியில் பிராந்தியம் கிடுகிடுத்தது. தபதபவென்று யார் யாரோ ஓடிவருவதற்குள் பன்னிரண்டு அதிரடிப் படையினர் இறந்து விழுந்திருந்தார்கள். குண்டு பாய்ந்த கட்டடங்களெல்லாம் கண்ணாடி உடைந்து காணப்பட்டன.

கண்ணிமைக்கும் நேரம்தான். உடல் முழுதும் ஆயுதங்களைக் கட்டிக்கொண்டு வந்தவர்கள் அவர்கள். ஆகவே, கண்மூடித்தனமாகப் பிரயோகம் செய்ததில் இழப்பு கடுமையாக இருந்தது. நெருங்கவே முடியாதபடிக்கு உக்கிரம் காட்டினார்கள். இரு தரப்பிலும் பதுங்கியிருந்து சுட்டுக்கொண்டே இருந்ததில், யார் எங்கே இருக்கிறார்கள் என்பதே பொது நபர்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. கிராஸ் ஃபயரில் இறந்த பாதுகாப்பு வீரர்கள்தான் அதிகம்.

எல்லாம் முடிந்து மீண்டும் அமைதி திரும்புவதற்கு ஒன்றே கால் மணி நேரமாயிற்று. விழுந்து கிடந்தவர்களைப் புரட்டி அடையாளம் பார்த்தார்கள். தொப்பியைக் கழற்றி மரியாதை செலுத்தினார்கள். வந்த கிங்கரர்கள் இரண்டு பேரும் கூட இறந்துதான் விழுந்து கிடந்தார்கள். அவர்களுக்கு அஞ்சலியெல்லாம் கிடையாது. போட்டோ எடுத்து வைத்துக் கொண்டார்கள். ஏதாவது கிடைக்கிறதா என்று பாக்கெட்டுகளில் சோதனை போட்டார்கள். நாலைந்து பல்லி மிட்டாய் கிடைத்ததோ என்னவோ. ஆனால், அவர்கள் லஷ்கரின் ஆட்கள் என்பது மட்டும் உடுத்தியிருந்த ஆடையிலிருந்தே தெரிந்துவிட்டது.

காஷ்மீர் தீவிரவாதிகள் விஷயத்தில் விசாரணைகளுக்கெல்லாம் பெரிய மகத்துவம் கிடையாது.

இன்னார்தான் செய்தார்கள் என்று கண்டுபிடிப்பது பெரிய விஷயமே இல்லை அங்கே. ஆனால், கண்டுபிடித்து என்ன ஆகப்போகிறது? உடனடியாக முஸஃபராபாத்துக்குப் போய் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து அழைத்துவந்துவிட முடியுமா என்ன?

இந்தச் சௌகரியம் காஷ்மீர் இயக்கங்களுக்கு மிகப்பெரிய வரம் என்றுதான் சொல்லவேண்டும். கிரவுண்டுக்கு வெளியே உட்கார்ந்துகொண்டு விளையாடுவதில் இருக்கிற சௌகரியம். இந்திய ராணுவமும் சரி, காஷ்மீர் மாநிலக் காவல் துறையும் சரி, எல்லைப் பாதுகாப்புப் பிரிவும் சரி. அதிகபட்சம் செய்யக்கூடியது, உள்ளூர் மக்களிடம் விசாரிப்பது.

'வந்தது யார்? உனக்குத் தெரியுமா? நீ அடைக்கலம் கொடுத்தாயா? உனக்குத் தெரிந்த யாராவது அடைக்கலம் கொடுத்தார்களா? உனக்கு விரோதிகள் யாராவது? எங்கே தங்கியிருந்தார்கள்? என்ன செய்தார்கள்? உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியுமா?'

திரும்பத் திரும்பக் கேட்கப்படும் இத்தகைய கேள்விகளால், காஷ்மீர் மக்கள் வெறுத்துப் போயிருக்கிறார்கள் என்பது உண்மை. குறிப்பாக, எல்லையோர கிராமவாசிகள் விசாரணை என்கிற பெயரில் அழைத்துச் செல்லப்பட்டு நாள் கணக்கில், வாரக்கணக்கில் போலீஸ் ஸ்டேஷன்களில் படுகிறபாடு கொஞ்சமில்லை என்கிறார்கள் விவரம் தெரிந்தவர்கள்.

சந்தேகமில்லை. காஷ்மீரத்து மக்களின் உதவி ஒத்தாசை இல்லாமல், அந்நிய சக்திகள் அங்கே நாச வேலைகள் புரிவது சாத்தியமே இல்லை.

ஆனால், குத்துமதிப்பாக மக்களை அள்ளிக்கொண்டு போய் விசாரணை என்று இறங்கும்போது, வெறுப்பு அந்தத் தீவிரவாதிகளின் மீது வருவதைக் காட்டிலும் காவல் துறையின்மீது அதிகம் வந்துவிடுகிறது. விளைவு, அரசுக்கும் காவல் துறைக்கும் எதிராகத் தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவிப்பதற்காகவாவது அவர்களில் சிலர் தீவிரவாதிகளுக்கு உதவுகிறவர்களாகவும் மாறிப்போய்விடுகிறார்கள்.